# அமைதிப்படைக்கும் அதிகாரப்பரவலுக்கும் தொடர்பு இல்லை!


விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 ஆனி 30 துல்ஹஹஜ் 10 இதழ் 61

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 14-07-1989



University of ... Library RECEIVED 1989 Periodicals


## ராஜீவுக்கு பிரேமா பதில்

(கொழும்பு)

இந்திய அமைதிப்படை இங்கிருப்பதற்கும் இலங்கையில் மாகாணங்களின் அதிகாரப் பரவலாக்கலுக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இந்தியப் பிரதமருக்குக்கு தெரிவித்துள்ளார்.

சிறப்புத் தூதுவர் திரு. பி.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - தேஷ்முக் நேற்றும் சந்திப்பு!

[கொழும்பு]

இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதி திரு. பி. ஜி. தேஷ்முக் நேற்று 2வது தடவையாக ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸாவுடன் பேச்சு நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தையை அடுத்து இரு நாட்டு அதிகாரி

(8-ம் பக்கம் பார்க்க)

# அமிர், யோகேஸ் சுட்டுக்கொலை

## சிவசிதம்பரம் படுகாயம்; இருஇளைஞர்களும் பலி!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் எம்.பி. [வயது 61], முன்னாள் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோர் நேற்று இரவு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொழும்பிலுள்ள திரு. யோகேஸ்வரனின் இல்லத்தில், முக்கிய ஆலோசனைக் கூட்டமொன்றை நடத்திக்கொண்டிருந்தவேளையில் அக்கூட்டத்தில் கலந்துகொண்ட மூன்று இளைஞர்கள் இவர்களைச் சுட்டுக்கொன்றதாக கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் படுகாயமடைந்தார்.

இந்தக்கொலைக்கு காரணமானவர்கள் எனக்கூறப்படும் மூன்று இளைஞர்களில் இருவர் திரு. அமிர்தலிங்கத்தின் மெய்ப்பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர். (8-ம் பக்கம் பார்க்க)

## பேராதனை தமிழ் மாணவிகள்

[யாழ்ப்பாணம்]

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவிகள் விமான மூலம்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழகம் நேற்றும் இயங்கியது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் நேற்றும் வழமை போல் இயங்கியது.

தென் பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது தெரிந்ததே.

கிழக்கில் மட்டக்களப்பு பல்கலைக்கழகமும், வடக்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தொடர்ந்து வழமை போல் இயங்குகின்றன. (ஐ)

## "கிழக்கில் ராணுவமுகாம்கள்; வடக்கில்கடற்படைவிஸ்தரிப்பு'

### ஈ. பி. ஆர். எல். எவ். கண்டன அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''இலங்கை அரசுக்கும், அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும் குழுவினருக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின் காரணமாக ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் இராணுவ முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டு, மேலதிக துருப்புகளையும் சேவையிலீடுபடுத்தியுள்ளனர். இதே சமயம் வடக்கிலுள்ள காரைநகர் கடற்படைத் தளத்தை விஸ்தரிக்கும் முஸ்தீபுகளில் கடற்படையினர் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றனர்'' என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## பத்மநாபா அறிக்கை

(சென்னை)

மாகாண சபையின் பதவிகளிலிருந்து விலகி தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. கே. பத்மநாபா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுடன் பேச்சு

(8-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் தொடர்ந்து பதற்றம்!

(வடமராட்சி)

பருத்தித்துறைப்பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருவதுடன் தேடுதல் நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருப்பதுடன் தனியார் வாகனங்கள்,

(8ம் பக்கம் பார்க்க)

## மருத்துவ பேராசிரியர் அறையில் பூட்டிவைப்பு!

### யாழ்.பல்கலைக்கழகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறைப் பேராசிரியர் ஒருவர் நேற்று பல்கலைக்கழக அறை ஒன்றில் மாணவர்களால் பூட்டிவைக்கப்பட்டார்.

நேற்றுக்காலை வடஇலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியின் கட்டிடத் திறப்பு விழாவுக்கு குறிப்பிட்ட பேராசிரியர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவிருந்தார்.

அந்த வைபவத்தில் பேராசிரியர் கலந்துகொள்வதை தடுப்பதற்காகவே இவ்வாறு அறை ஒன்றினுள் வைத்து பூட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

''. பல்கலைக்கழகமே தனி

(8-ம் பக்கம் பார்க்க)

## சுழிபுரம், மூளாய் பகுதிகள் நேற்று சுற்றிவளைப்பு!

[யாழ்ப்பாணம்]

மூளாய், பொன்னாலை, சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, பண்டத்தரிப்புப்பகுதிகள் நேற்றுச் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டன.

அப்பகுதிகளில் காலையில் இருந்து நண்பகல் வரை பஸ் சேவைகளும் நடைபெறவில்லை. பிற்பகலில் ஓரளவு பஸ் சேவை இடம்பெற்றது. சில இடங்களில் வீடு வீடாகவும் சோதனைகள் இடம்பெற்றன. (51)

## 'அமைதிப்படை விலகாவிடின் நடவடிக்கை'

(கொழும்பு)

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு இணங்கி இம்மாதம் 29ம் திகதிக்கு முன்னர் இந்திய அமைதிப்படை விலக்கிக்கொள்ளப்படாவிட்டால் இலங்கை இராணுவம் அவர்களுடன் மோதநேரிடும் என்று வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதி திரு. பி. ஜி. தேஷ்முக்கின் இலங்கை விஜயம் அமைதிப்படை விலகலுக்கு வழிவகுக்கும் என்றுநம்பிக்கை தெரிவித்த அமைச்சர் திரு. விஜயரட்ண 29-ம் திகதிக்கு முன்னர் அமைதிப்படை வெளி

(8-ம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து ஊழியர்கள் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

தென்பகுதியில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக நடைபெற்றுவந்த போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தம் நேற்றுடன் கைவிடப்பட்டது.

வேலைநிறுத்தம் செய்த ஊழியர்களின் கோரிக்கை குறித்து பிரதம மந்திரி திரு. ரி.பி. விஜயதுங்க, போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

## பாரிஸிலிருக்கும் ராஜீவுக்கு உடனுக்குடன் தகவல்!

(கொழும்பு)

இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதி திரு. பி. ஜி. தேஷ்முக் இலங்கை ஜனாதிபதியுடனும் மற்றும் அதிகாரிகள்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'சார்க்' நெருக்கடி குறித்து ராஜீவ் - எர்ஷாத் பேச்சு!

## இலங்கைப் பிரதிநிதி பாக். செல்கிருர்

(டாக்கா)

சார்க் அமைப்பு மாநாடு கொழும்பில் நவம்பர் மாதமளவில் நடைபெறுவது குறித்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியுடன் பங்களாதேஷ் ஜனுதிபதி ஜெனுப் முகமட் எர்ஷாத் பேச்சுக்கள் நடத்துவாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பு இன்று அல்லது நாளை பாரிஸில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் புரட்சியின் 200-வது ஆண்டு கொண்டாட்டத்தில் இரு தலைவர்களும் கலந்துகொள்ளும் பொருட்டு பாரிஸ் சென்றுள்ளனர்.

இலங்கையிலுள்ள இந்திய அமைதிப்படையினரின் வாபஸ் குறித்து எழுந்த சர்ச்சையால் இலங்கை, சார்க் மாநாட்டை கொழும்பில் நடத்தமாட்டாதென்றும் சார்க் தொடர்பான எந்தவிடயத்திலும் கலந்து கொள்ளப்போவதில்லை என்றும் அறிவித்ததை அடுத்து இந்த அமைப்பில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதற்கு சுமுகமான தீர்வு ஒன்றை காணும்பொருட்டு திரு. காந்தியினதும் ஜனுப் எர்ஷாத்தினதும் சந்திப்பு அமையலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை இது தொடர்பான பேச்சுக்களை நடாத்த பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் குழு இலங்கை வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் 'சார்க்' அமைப்பு மாநாடு நடாத்துவது தொடர்பாக பாகிஸ்தான் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பாகிஸ்தான் பிரதிநிதிகள் இது குறித்து பேச்சு நடாத்த அமைப்பில் அங்கம் வகிக்கும் ஏழு நாடுகளுக்கும் விஜயம்செய்யவுள்ளனர்.

இதே வேளை இலங்கை தனது நிலைப்பாடு குறித்து பேச்சுக்கள் நடத்த விரைவில் பாகிஸ்தானுக்கு தனது விசேட பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைக்குமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## வரி விளம்பரம்

### தேவை

பழைய பித்தளை, செம்பு, அலுமினியம், வெங்கலம் உயர் விலைக்குப் பெறப்படும். பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3057)

### விற்பனைக்கு

பாவித்த அலுமாரிகள், மேசைசள், கட்டில்கள் குஷன் செட் கதிரைகள், சிசில் குளிர் சாதனப் பெட்டி, R. 60, 18'' கலர் National T V. Wrights iron safe [English make[] மற்றும் வேறு சகல வீட்டுத் தளபாடங்களும் உடனடியாக விற்பனைக்கு உண்டு, தொடர்பு: இல. 41, 4ம்குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி 3073)

திருநெல்வேலி சுற்றுடலில் ரியூட்டரி நடத்தக் கூடிய காணி, அல்லது Hall வாடகைக்கு உடன் தேவை. விளம்பர இலக்கம்; ஏ344 C/o. ஈழநாடு யாழ்ப்பாணம். (ஏ 344)

நிக்கோன் ஒட்டோமட்டிக் லெவல். சேவயரிங் லெவல்ஸ் (Wild NAK 2), ரெலஸ் கோப் (D. K. M. 2) (Swiss Make)உடன்விற்பனைக்குண்டு. T. சபாரட்னம், ஆயர்பாடி ஒழுங்கை, மடத்தடி, தெல்லிப்பளை. (சி-3086)

### மணப்பந்தல்

வெளிநாட்டில் உயர்பதவி வகிக்கும் டாக்டருக்கு நல்ல ஆங்கில அறிவும், உயர்தர பரீட்சைக்கு மேற்பட்ட தேர்ச்சிகளும் உடைய மணமகள் தேவை. இந்து உயர் வேளாள குல, செவ்வாய்க்குற்றமுள்ள அழகுள்ள உயர்ந்த 29 வயதுக்குட்பட்ட பெண் விரும்பத்தக்கது. சாதகம் மற்றும் முழுவிபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல C-3071, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-3071)

---

## கோட்டக்கல்வி அலுவலகத்தில் லிகிதர்கள் பற்றுக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களம் கோட்டக்கல்வி அலுவலகங்களாக பிரிக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு கோட்டக்கல்வி அலுவலகத்திலும் லிகிதர்கள் பற்றுக்குறை நிலவுவதாகத் தெரியவருகிறது. இதனுல் கோட்டக் கல்வி அலுவலகங்களில் கடமைபுரியும் லிகிதர்கள் கூடுதலான வேலைகளைச் செய்யவேண்டி இருப்பதாகவும் கூறப்படுகிறது,

ஒரு லிகிதர் முந்நூற்றி ஐம்பது பைல்களை பராமரித்தால் போதும் என்பது சாதாரண நடைமுறையாக இருக்கிறது. ஆனுல் கோட்டக்கல்வி அலுவலகங்களில் ஒரு லிகிதர் குறைந்தது 750 பைல்களை பராமரித்து கடமையாற்ற வேண்டியுள்ளதாம் இந்த வேலைகளுக்கான மேலதிக கொடுப்பனவுகன் எதுவும் வழங்கப்படுவதில்லையாம் (ஐ)

---

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு புதிய மாணவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

1989/90ம் கல்வி ஆண்டுக்காக யாழ். பலகலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்வதற்கென 785 மாணவர்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவு செய்திருக்கிறது.

இவர்களுள் 180 மாணவர்கள் விஞ்ஞான பீடத்துக்கும், 175 மாணவர்கள் கலைப்பீடத்துக்கும், முகாமைத்துவத்துக்கு 100 மாணவர்களும், வர்த்தகத்துக்கு 100 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத்துக்கு 100 மாணவர்களும், மருத்துவத்துறைக்கு 105 மாணவர்களும், விவசாயத்துறைக்கு 25 மாணவர்களும் தெரிவாயுள்ளகினர்.

---

## நல்லூர்ப் பகுதி சுற்றிவளைப்பு!

(யாழ்ப்பாணம்)

நல்லூரில செட்டித்தெரு பகுதி நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை திருநெல்வேலியில் குமாரசாமி வீதியில் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவமொன்று இடம் பெற்றதைத் தொடர்ந்து இப்பகுதியில் பதற்றம் நிலவியது. (134)

---

## ப. நோ. கூ. சங்கங்களுக்கு கோரிக்கை

[நெடுந்தீவு]

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை மூன்று மாத இருப்பாகக் களஞ்சியப்படுத்தி வைக்கும்படி கூட்டுறவு ஆணையாளர் திரு. ச. வேலாயுதம்பிள்ளையை சுற்றறிக்கைமூலம் கேட்டுள்ளார்.

பாவனையாளரின் அத்தியாவசியப் பொருள்களின் அரிசி, மாவு சீனி, மண்ணெண்ணெய், பருப்பு வகைகள் மிக முக்கியமானவை என்று அச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி பற்றுக்குறைவான சங்கங்கள் அவ்வப்பகுதிக் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளருடன் தொடர்பு கொண்டு நிதி ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

---

## பழுதடையும் நிலையில் உழவு யந்திரங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள கமநலசேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்ட ஆறு உழவு யந்திரங்களையும் எவரும் பொறுப்பேற்க முன்வராததினுல் அவை பழுதடையும் நிலையில் இருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான புனர்நிவாரண கழகத்தினர், இந்த உழவு யந்திரங்களை யாழ்ப்பாணத்திலுள்ள பன்னிரண்டு கமநலசேவை நிலையங்களுக்கும் அன்பளிப்பாக வழங்கி இருந்தனர்.

இரண்டு கமநலநிலையங்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் அனுப்பிவைக்கப்பட்ட உழவு யந்திரங்களை எந்த கமநலசேவைநிலையமும் பொறுப்பேற்க இதுவரையும் முன்வரவில்லையாம். (ஐ)

---

## இன்று சித்திரத் தேர்

[யாழ்ப்பாணம்]

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும், புங்குடுதீவு பாணுவிடைச்சிவன் தேவஸ்தானத்தில் சித்திரத்தேர் அமைக்கும் திருப்பணி வேலையாக இன்று நண்பகல் 12 மணிக்கு சிற்பக்கலைஞர் ஆ. ஜீவரெட்னம் குழுவினரால் தேரின் அடித்தளம் அமைக்கப்படவுள்ளது.

---

## தற்கொலை

[யாழ்ப்பாணம்]

குடும்பத் தகராறு காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார்.

புங்குடுதீவைச் சேர்ந்த எஸ் பாலசிங்கம் எனும் எட்டுப் பிள்ளைகளின் தந்தையே தற்கொலை புரிந்தவராவார்.

---

## சாந்தியோக நிலையத்தின் யோகாசனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன சாந்தியோக நிலையத்தினரின் யோகாசனப்போட்டியும், பரிசளிப்பு வைபவமும் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினமும் சைவத்திரு. க. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

முதலாம் நாள் நிகழ்ச்சிகள் திவ்விய ஜீவன மண்டபத்தில் நடைபெறும் காலையில் ஆண்களுக்கான ஆசனப் போட்டியும், மாலையில் பெண்களுக்கான ஆசனப்போட்டியும் இடம்பெறும் போட்டிகளில் ஆறுவயதுமுதல் எழுபதுவயது வரையுள்ள ஆண், பெண் இரு பாலாரும் பங்குபற்றுவார்கள்

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும், மங்கள இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். விழாத் தலைவர் யோகத்தின் சின்னமாகிய ஓங்கார கொடியை எற்றிவைப்பார். நல்லைஆதீன இரண்டாவது குருமககா சந்நிதானம் ஆசியுரை வழங்குவார். 'பெண்களும் யோகாசனமும்' என்ற பொருள்பற்றி செல்வி. சி. பாலசுப்பிரமணியமும், ஆரோக்கிய வாழ்வுக்கு அருமருந்து யோகாசனம் என்பது பற்றி திரு. செ சண்முக ஜெகனுனமும். மக்களுக்கு மிக முக்கியம் பிராணுயாமம் தியானம் என்பதுபற்றி புலவர் ஈழத்துச் சிவானந்தனும் பேசுவார்கள்.

வெற்றி பெற்றோர்க்கான பரிசுகளை இடண்டாவது குருமகாசந்நிதானமும் [illegible] வள்ளல் க. கனகராசாவும் வழங்குவார்கள் (ஐ)

---

## பாரதி இல்லம் முதலிடம்

(மட்டுவில்)

கொடிகாமம் கொத்தணி மூலாதாரப் பாடசாலையான திருநாவுக்கரசு மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பாரதி இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

கொத்தணி அதிபர் ச. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் பாரதி, கம்பன், வள்ளுவன் ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையில் போட்டிகள் இடம்பெற்றன.

இதில் பாரதி இல்லம் முதலாமிடத்தையும், கம்பன் இரண்டாமிடத்தையும், வள்ளுவன் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

---

## சம்பளம் கிடைக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் சில அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கடந்த ஜூன் மாதச் சம்பளம் இன்னமும் வழங்கப்படவில்லையாம்.

கொழும்பில் தலைமையகத்தைக்கொண்டு யாழ்ப்பாணப் பகுதியில் இயங்கும் திணைக்களங்கள், சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் ஊழியர்களுக்கே சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. [ஐ]

---

## சங்காபிஷேகம்

(தெல்லிப்பழை)

மல்லாகம் பழம்பிள்ளையார் தேவஸ்தான மணவாளக் கோல அஷ்டோத்தர கலச சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆரம்பமாகும் மாலை 6 மணிக்கு வசந்தமண்டப பூசையுடனும் சுவாமி வீதி உலாவும் இடம் பெறும்,

---

## தீர்த்த உற்சவம்

(வடமராட்சி)

தென்புலோலியூர் உபய கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த தீர்த்த உற்சவம் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமைகாலை சிறப்பாக நடைபெறவுள்ளது (51)

---

## தெய்வச்சிலைகள்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்னவிநாயகர் ஆலயத்தில் சந்தானகோபாலர், மகாலட்சுமி ஆகிய தெய்வச் சிலைகள் வழிபாட்டிற்காக வைக்கப்படவுள்ளன.

இதற்கென இரு கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து இச்சிலைகள் தருவிக்கப்படவுள்ளன.

---

## அஞ்சல் தொலைசேவை ஆண்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கத்தின் யாழ். கிளையின் முப்பத்திரண்டாவது ஆண்டுப்பொதுக்கூட்டம், யாழ். அஞ்சல் அலுவலகத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் முக்கியமான சில தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதுடன் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறும். (134)

---

## மக்காவில் இலங்கையருக்கு பாதிப்பில்லை

(கொழும்பு)

மக்காவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் இலங்கையர் எவரும் பாதிப்படையவில்லை என்று சவூதி அரேபியாவின் இலங்கைத் தூதர் அல்ஹாஜ் ஏ. எல். எம் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

இக்குண்டுவெடிப்பில்ஒருவர் கொல்லப்பட்டும் 16பேர் காயமடைந்ததும் தெரிந்ததே.

---

## கால்நடை பாதிப்பு

[மட்டுவில்]

வரணிபகுதியில் கால்நடைகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து சாவகச்சேரி அரச கால்நடை வைத்திய அதிகாரி திருமதி சாம்பசிவம் தடுப்பு ஊசிமருந்து ஏற்றுவதில் துரிதமாக ஈடுபட்டுள்ளார்.

---

## பென்ஷன் வவுச்சர்கள்

[மானிப்பாய்]

இம்மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்கள் நேற்றுயாழ். செயலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் நாளை இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். (71)

---

## நியமனம்

[கிளிநொச்சி]

இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலயத்தின் புதிய அதிபராக கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதி அதிபர் கனக மகேந்திரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கல்வித் திணைக்கள ஊழியரின் பட்டுடுத்தப்பட்ட கூட்டுறவுச் [illegible]ன் உதவிச் சங்க கிளிநொச்சி மாவட்டப் பிரதிநிதியுமாவர். (83)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தொழில் என்பது எத்தனை கீழ்த்தரமான இருந்தாலும் அதைச் செய்வதில் அவமானம் ஒன்றுமில்லை. சோம்பேறித்தனமாகத் திரிவதுதான் அவமானம்:

— டால்ஸ்டாய்.

## நமது நோக்கு

# சுபிட்சம் தருமா பிரெஞ்சுப்புரட்சி!

"'சுதந்திரம், சமத்துவம்' சகோதரத்துவம் ஆகியன உலகிற்குப் பிரகடனப் படுத்தப்பட்ட இந்த அதிகாலை வேளையில் உலகில் வாழ்பவர்கள் வேறுபேறு பெற்றவர்கள்; அதுவும் சிறு வயதுடையோருக்குச் சொர்க்கமேதான்!" — இப்படிக் கூறியவர் பிரித்தானியப் பாராளுமன்ற 'விக்' கட்சி உறுப்பினர்கள் சார்ள்ஸ் ஜேம்ஸ் (F)பொக்ஸ் அவர்கள் பிரெஞ்சுப் புரட்சி வெற்றி கண்டு பிரகடனம் வெளியானதும் பிரித்தானியாவில் இப்படி எதிரொலித்திருக்கிறது.

இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் வரலாற்றின்மிக முக்கியாக இப்புரட்சி விளங்கியது. அமெரிக்காவின் சுதந்திரப்புரட்சி ருஷ்யாவின் அரசியற்புரட்சி, பிரித்தானியாவின் கைத்தொழிற்புரட்சி ஆகியன காலத்தின்தேவைகள். பிரெஞ்கப் புரட்சியோ மன்னராட்சியை ஒழித்து மக்கள் ஆட்சியைமலர்வித்த வெறும் சரித்திர நிகழ்ச்சி மாத்திரமன்று.

உலக சமுதாயத்திற்கு அரும் பெரும் அரசியல் தத்துவங்களைத் தந்தது; அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்குப் பல கருத்துக்களை விதைத்தது.

புரட்சி ஏன் ஏற்பட்டது! பிரெஞ்சு மக்கள் மன்னனுக்குவரி; பிரபுக்களுக்கு உழைப்பு; தேவாலயங்களுக்குக் காணிக்கை — மிஞ்சியது என்ன? வறுமையும வேதனையும்தான்!

"நாடு; நானேநாடு!" என்ற இறுமாப்போடு பதினலாம் லூயி மன்னன் ஆண்டான். புரட்சி நடந்த வேளையில் ஆண்டிருந்த பதினறும் லூயி மன்னனே மக்களைப்பற்றிக் கவலையே கொள்ளவில்லை. மக்கள் வரி எல்லாம் அவனின் கேளிக்கைகளுக்கே போயின.

சிறு சம்பவம் ஒன்று வயிற்றுக்குஇல்லா துவாடிய மக்கள்முறையிடச் சென்றிருக்கிறார்கள் அரண்மனைக்கு "என்ன ஆரவாரம்?" எனக் கேட்டிருக்கிறுள் மகாராணி மேரி அன்ரறெயிட், "உண்பதற்கு ரொட்டியில்லை, என மக்கள், முறையிடுகிறார்கள்!" என ஆலோசகர்கள் கூறினர்கள். 'அப்படியா? ரொட்டி கிடைக்கவில்லையாயின் கேக் சாப்பிடலாமே?', என்றாராம் மகாராணியார்.

மொண்டேக்கு. வால்நேர், ரூசோ போன்ற அறிஞர்களின் எழுத்துக்கள் மக்களைச் சிந்திக்க வைத்தன. குறிப்பாக, குரூசோவின் "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூல் மக்களின் ஆட்சிமுறை பற்றிய சிந்தனையைத் தூண்டியது.

புரட்சி செய்த மக்கள் முதலில் 'பஸ்ரைல்' சிறையை உடைத்தார்கள், அதன் திறப்பை வாஷிங்டனுக்கு அனுப்பியிருக்கிறன் மக்கள் சார்பாக உருவான தேசியபடைத்தளபதி. ஏன் அனுப்பினன்? ஏற்கனவே அமெரிக்காவில் சுதந்திரப் போர்நடைபெற்றது; அந்த வெற்றிபிரெஞ்சு மக்களின் புரட்சிக்குத் திறவுகோலாகியது எனவே கொடுங்கோலாட்சியின் வீழ்ச்சியின் நினைவுச் சின்னமாக அமெரிக்காவிற்கே அனுப்பப்பட்டது.

புரட்சி என்றால் என்ன? எண்ணங்கள் மலர்ந்து சித்தாந்த வடிவம் பெறும் அவை செயல் உருவம் பெறும்போது புரட்சி ஆகிறது. இந்தப்புரட்சியின் போது சில தீயவிளைவுகள் ஏற்பட்டதை வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டத்தவறவில்லை. ஆனல் பிரெஞ்சுப் புரட்சி தந்த சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்று கருத்துக்கள் நாடுகள் பலவற்றின விடுதலைக்கு வளர்ச்சிக்கு மக்களின் நலனுக்கு வழி வகுத்தன என்பதை யார்தான் மறக்க முடியும்?

'இன்று பலநாட்டு ஆட்சித்தலைவர்களும் பிரான்சில் கூடியிருக்கிறார்கள் இருநூறாவது விழாவிற்காக. அவர்கள் மீண்டும் தமது நாடுகளுக்குச் சென்று நல்ல அரசியல் முடிவுகளுக்கு சுபீட்சமான எதிர்காலத்திற்கு வித்திடுவார்கள் என நம்புவோமாக!

# பிரெஞ்சு நாட்டின் 200வது தேசிய தினம்

ஜூலை 14ம் நாளாகிய இன்று, பிரெஞ்சு நாட்டின் தேசிய தினமாகும். இன்று அதன் 200வது தேசிய தினமாகையால் அதன் சிறப்பு மேலும் முக்கியத்துவம் அடைகின்றது. பிரெஞ்சு மக்கள் இத்தினத்தைப் பல கலை கலாசார களியாட்டு விழாவாகக் கடந்த மூன்று மாதங்களாகக் கொண்டாடிவருகிறார்கள். பல தேசியத் தலைவர்கள் இன்று நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மேலும் இதை மேன்மைப்படுத்துகிறார்கள்.

பிரெஞ்சுப் புரட்சியின் தத்துவம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதே. இதையே பிரெஞ்சு மூவர்ண தேசியக் கொடியான வெள்ளை, சிவப்பு, நீலம் உணர்த்துகின்றன.

கொடுங்கோலாட்சி செய்த 14ம் லூயி மன்னருக்கு எதிராக மக்கள் கிளர்ச்சிசெய்தார்கள். 1789ம் ஆண்டு ஜூலை பதினலாந் திகதி மன்னர் ஆட்சியைக் கைப்பற்றினர்கள். குடியாட்சி மலர்ந்தது. அன்றைய தினத்தையே வருடந்தோறும் பிரெஞ்சு மக்கள் தம் தேசியதினமாகக் கொண்டாடுகிறார்கள்.

பிரெஞ்சு நாடு கலை, கலாசார, கலைப்பொருட்களுக்கு உலகப் பிரசித்தி பெற்றது. அதன் விஞ்ஞான பொருளாதார வளர்ச்சியும் உன்னத நிலையில் உள்ளது.

இத்தகைய மகத்தும் வாய்ந்த நாட்டு மக்களுடன் தமிழ் மக்கள் பல வருடங்களாகத் தொடர்பு வைத்திருக்கிறார்கள். மொறீஸியஸும் ரியூனியஸும் மற்றும் பிரதேசங்களிலும் தமிழ்மக்கள் வாழ்வதுடன் பிரெஞ்சு மொழியையும், கலாசாரங்களையும் ஏற்று வாழ்கிறார்கள், இன்று எமது பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகளினல் 65,000 ஈழத் தமிழ் இளைஞர்களுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரித்துவருவது, தமிழ் மக்களுடன் மட்டுமன்றி, ஈழத் தமிழ்மக்களுடன் பிரெஞ்சு மக்கள் கொண்டுள்ள தொடர்பை மேலும் வளம்படுத்திக் கொள்வதற்கு சென்ற 13ஆண்டுகளாக யாழ். நகரில் இயங்கிவரும் யாழ்–பிரெஞ்சு நட்புறவுச் சங்கம் (Alliance Francaic de Jaffna) ஈழ மக்களுக்கோர் அரிய வாய்ப்பாகும். இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஈழமக்கள் இச்சங்கத்தை வளர்த்துத் தம் சமூக கலாச்சார, பொருளாதார, அரசியலில் பயன்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இத்தாபனத்தின் தலைமையகம் பாரிஸில் உண்டு. இதன் செயலகங்களாக இலங்கையில் சொழும்பு, கண்டி. யாழ். நகரங்களில் இயங்குகிறது. இது பிரெஞ் அரசாங்கத்தின் மேற்பார்வையில் இயங்கினலும் இது ஒரு சுதந்திரமான அமைப்பாகும்.

பிரெஞ் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட நிர்வாகஸ்தரையும், அங்கத்தவர்களினல் தெரிவுசெய்து கொள்ளப்பட்ட நிர்வாகக் குழுவையும் உள்ளடக்கியது. கலை, கலாசார, சமூக, பொருளாதார ஆர்வமுள்ள அனைவரும் இதில் அங்கத்தவர்களாகச் சேரலாம். இங்கே பிரெஞ் மொழிப் போதனை, பிரெஞ் கலை, கலாசார நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இன்று அதன் 200-வது தேசிய தினத்தையிட்டு யாழ்.-பிரெஞ் மன்றத் தலைவர் சார்பிலும், ஈழமக்கள் சார்பிலும் வாழ்த்துவோமாக!


வாழ்க பிரெஞ்சு தேசிய தினம்! வெல்க யாழ் - பிரெஞ்சிய நட்புறவு!

'அவதானி'

## சுவாமி சிவானந்த சரஸ்வதி

### மகாசமாதி அடைந்த தினம் இன்று

# தெய்வீக வாழ்வுக்கு வித்திட்ட மகான்



இமயத்திலிருந்து கங்கையாறு இறங்கிவரும் வழியில், முல்லை வீலத்தில் மருதவாழ்வு தமைத்த பசுமடம் ஒன்றைப் பெரிய பணியகமாக்கிப் பன்முகச்சேவை புரிவதற்குப் பலரை மனிதராக்கி, தெய்வீக வாழ்வு வாழப் பழக்கியவர் சிவானந்தர். உடற்பிணி போக்கிய டாக்டராக இருந்தவர். உயிர்ப்பிணி போக்கும் குருவாகக் கோலங் கொண்டு, நீண்டகாலம் சேவைசெய்து, உலகமெங்கும் மெய்யடியார்களை மாணுக்கர்களாகக் கொண்ட மகான் அவர், அவர் யோகக்கலை எல்லோருக்கும் உரியது அதற்குச் சிறப்பிடம் கொடுத்தவர். பேச்சை சுருக்கி சாதனை செய்யுமாறும் நல்லதையே பேசுமாறும், நல்லதையே நினைக்குமாறும் நல்லதையே செய்யுமாறும் பழக்கியவர். அவர் விட்டுச் சென்ற நூற்றுக்கணக்கான நூல்கள் தரமான தமிழிலும் தூய ஆங்கிலத்திலும் உள்ளன, பெரிய சங்கதிகளை இலகுவாக விளக்கிய அவர் ஒரு பெரிய மகாஞய் அப்பைய தீட்சிதரின் வழி வந்தவர். பாடசாலைக்கும் கோயிலுக்கும் இடையில் ஒரு மடம் குருமடமாக நிலவிப் பணிபுரிய வவத்தவர் அவர். அவர் பணி வெல்க. அவர் புகழ் வாழ்க. அன்பே சிவம்.

க. கனகராசா.

# சண்டேஸ்வரர் ஆலய மஹாகும்பாபிஷேகம்

[அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நேற்று நடைபெற்றது. கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் மணவாளக்கோலம் தண்டிகை உற்சவம் இன்று நடைபெறுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது].

**யாழ்.** அரியாலைப் பதியில் அமர்ந்திருந்து அருள் சுரந்து ஞான மூட்டுகின்றார் ஸ்ரீஞானவைரவப் பெருமான்.

இவ்வாலயம் இலங்கையில் உள்ள பெரிய வைரவர் ஆலயங்களில் ஒன்ருகும். மூர்த்தி தலம், தீர்த்தம், விருட்சம் ஆகிய பல்வகைச் சிறப்புப் பொருந்திய பழம் பெருமையுடையது. சேத்திர பாலகர் எனப்படும் இவ்வைரவப் பெருமான் அரியாலை மக்களுக்கு சிறந்த காவல் தெய்வமாக விளங்கி அடியார்களின் இன்னல்களைத் தீர்த்து வருகின்றார்.

வருடந்தோறும் சித்திரை மாத பூரநட்சத்திர தினத்தை இறுதியாகக் கொண்டு பத்து நாட்கள் அலங்கார உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. நேரக்கணக்கின்படியும், ஆகமவிதிமுறை தவருதும் நித்தியநைமித்திய பூசைகள் நடைபெற்றுவருகின்றது.

தர்மபரிபாலன சபையால் சிறப்புற நிர்வகிக்கப்பட்டு வரும் இவ்வாலயம் விநாயகப் பெருமானையும் வள்ளிதேவசேன சமேத முருகப் பெருமானையும் பரிவார மூர்த்திகளாகக்கொண்டு புதுப்பொழிவுடன் காட்சியளிக்கின்றது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சண்டேஸ்வரர் ஆலய பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நேற்று நடைபெற்று, இன்று வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகதின, சங்காபிஷேகம், திருவூஞ்சல், மணவாளக்கோல உற்சவம் நடைபெறவுள்ளது.

தமிழ்மக்களைக் காக்கும்படி காவல் தெய்வமான வைரவப் பெருமானை வேண்டுதல் செய்வோம்.

க. சண்முகலிங்கம்

[செயலாளர், அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் தர்மகர்த்தாசபை]

## இராசி பலன்

**14-07-1989**

ஏகாதசி இரவு 12–18வரை, விசாகம் பகலல் 10–18 வரை.

இராகுகாலம் 10–30 முதல் 12–04 வரை: மரணயோகம்.

சர்வ ஏகாதசி விரதம்.

சுபதினம்.

மேடம்: சிறு விபத்து, நண்பருதவி, கடன் தொல்லை

இடபம்: எதிர்பாராத அதிர்ஷ்டம், தொழில்முயற்சி, குடும்ப மகிழ்ச்சி.

மிதுனம்: தெய்வ அனுக்கிரகம், பெரியோர் உதவி.

கடகம்: பயணங்களால் காரியத்தடை, தொழிலில் லாபமின்மை.

சிங்கம்: தொழிலில் கேடு, தூரத்துச்செய்தி.

கன்னி: தொழில் வெற்றி, பணியாளர்கள் பாராட்டு.

துலாம்: துயரமானசெய்தி அரசியல் தர்க்கம், பணமுடை.

விருச்சிகம்: பழைய உறவுகள். தொழில் வளர்ச்சி.

தனுசு; அயலவர் விரோதம், வேலைப்பளு.

மகரம்: வசீகரப்போக்கு, குடும்பத்தில் சுபகாரியம், பண வரவு.

கும்பம்; தொழில் மாற்றம், சென்ற இடத்தில் சிறப்பு, குடும்ப சுகம்.

மீனம்: தாய்வழி விரோதம், பணக்கஷ்டம், கடமை உணர்வு.

## நாச்சியரே எங்கள் ஆச்சியரே!

வெட்டுக் குளத்தில் வேர்விட்டுப் பொலிகின்ற
பட்டுப் பதாம்புயத்துப் பார்வதியே–உட்குவிந்து
அஞ்சேலென் றருள்புரியும் அன்னைபுவ னேஸ்வரியே
நெஞ்சத் தமர்வாய் நிறைந்து

வெள்ளன்ன வாகனத்தில் வெட்டுக் குளத்தன்னை
திருவீதி உலாவரும் உவகையினைத்-தெள்ளுதமிழ்ப்
பாவினுற் பாடியுன் பாதம் பணிந்திடவெம்
நாவில் நிறைவாய் நயந்து.

- தா. தேவமதுரம்

[வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய உற்சவ இறுதிநாள் இன்ருகும் ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தியாகத் திருநாளாம் புனி


அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் இனிய
**ஹஜ் நல்வாழ்த்துக்கள்!**
அழகிய பவுண் நகைகள், தங்கப் பவுண்
வைரங்களுக்கு
**கே.என்.எம். மீறுன் சாஹிப்**
**கன்னுதிட்டி - யாழ்ப்பாணம்**
போன் : 22585



உலக மக்களிடையே சமத்துவத்தை
நிலைபெறச்செய்யும் புனித ஹஜ்
பண்டிகைத்தினத்தில் வாடிக்கையாளர்களை
**நெஞ்சார வாழ்த்துகிறோம்!**


தையல் உலகின்
நவீன
முன்னோடிகள்
**ஆப்தீன்**
5, ஜும்மா
பள்ளிவாசல் லேன்,
பெரிய கடை,
யாழ்ப்பாணம்.



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய
**ஹஜ் நல்வாழ்த்துக்கள்!**
சகலவிதமான
அலங்கார அன்பளிப்புப்
பொருட்களுக்கு
**பென்லி ஹவுஸ்**
68, பெரியகடை,
யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்,
அனைவருக்கும்
**எமது ஹஜ் நல் வாழ்த்துக்கள்!**
வடபகுதி மக்களுக்கு
எம். ஜி. எம். ஸ்ரோர்ஸ்
அறிமுகம் செய்கிறது
SYMBOL OF QUALITY MGM
**ஐசிங் சுகர்**
**ICING SUGAR**
* சுவையானது * சுத்தமானது * கலப்பற்றது
* மனையியல் கழக மாதர்களால் சிபார்சு செய்யப்பட்டுவருகிறது.
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
எம். ஜி. எம். தயாரிப்புக்கள் வடபகுதி
மக்கள் நம்பிக்கையைப் பெற்றவை.
**எம். ஜி. எம். ஸ்ரோர்ஸ்,**
777, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


## நபி இப்ருஹிம் (அலை) அவ

## தியாகத்தின் சின்னம் புனித

இன்று நாம் அனைவரும் இவ்வேளையில் தியாகப் பெருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாளை உளமகிழ்ச்சியோடு கோலாகலமாக குதூகலமாக கொண்டாடிக்கொண்டிருக்கின்றோம். இந்நாள் எமது பிதா நபி இப்ருஹிம் (அலை) அவர்களது நினைவு தினமாகவும் திகழ்கின்றது.

கருணைக்கடல், காருண்ய சீலர், நபி இப்ருஹிம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை தலைமேல் கொண்டு, தியாகச் செம்மல் கலீலுள்ளா அவர்கள் தமது பாசத்திற்கும் அன்புக்கும், அருமைக்கும் நிறைவான புதல்வன் பச்சிளம் பாலகனை நபி இஸ்மாயீல் (அலை) அவர்களையே அறுத்துப் பலியிட முன்வந்த தியாகத் திருநாளாகவும் இப்பெருநாள் மிளிர்வது குறிப்பிடத்தக்கதாகும். இப்பத்தாம் பிறை உலக முஸ்லிம்கள் அனைவரையும் நபி இப்ருஹிம் (அலை) அவர்களை நினைவுபடுத்தச் செய்கின்றது. இப்புண்ணியதினம், நபி இப்ருஹிம் (அலை) அவர்களின் தியாகத்தையும், அவர்களின் இறைபக்தியையும் அல்லாஹ்வின் தோழன் என்ற பெயர் கொண்டுஅழைக்கப்படவேண்டிய காரணத்தையும் எமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

நபி இப்ருஹிம் (அலை) அவர்கள் இயற்கையிலே நல்ல பண்புடையோராகவும் வாரி வழங்கும் வள்ளலாகவும் இல்லையென்பாருக்கு ஈர்ந்து வக்கும் ஈகையாளராகவும் திகழ்ந்தார். விருந்தினரின்றி ஒருபோதும் தன்னந்தனிமையிலே உணவு உண்டதில்லை. உணவுவேளை நெருங்கி உணவு தயாராக இருந்தபோதிலும் விருந்தாளிகள் இல்லை என்பதற்காகப் பலமணிநேரம் தாமதிப்பார்கள். சிலவேளை

வர் கேட்டார்: ''இப (அலை) அவர்களே! உங் இருந்ததையெல்லாம் விட்டீர்களே தங்க எதனையும் வைத்துக் வேண்டாமா?'' உட லாஹ்வின் தோழர் இப (அலை) அவர்கள், ''நான் வனுக்காகவே வாழ் அவனது திருப்தியையு பையும் பெறுவதற்கா றையெல்லாம் நான் செய்கிறேன், இவைக அவனுக்காக அவனின்

### அபூஸனிகா

களில் தன்னுடன் இருந்து உணவருந்துவதற்காக ஏழைகளைத்தேடி பலமைல்களுக்கப்பால் சென்று ஏழைகளை அழைத்துவந்து அருகிலிருத்தி உணவூட்டித்தாமும்உண்ணும் மனப்பாங்குடையவர். இவ்வாறு தனக்காக மட்டும் வாழாது பிறர்நலமும் பேணி வந்த நபி இப்ருஹிம் (அலை) அவர்களிடம் ஓர் ஏழை வந்தார். தனது வறுமையையும், இயலாமையையும் முறையிட்டு உதவிசெய்யுமாறு வேண்டினார். அப்போது நபி அவர்கள் ஏறத்தாழ (6000) ஆறுயிரம் ஆடுகளைக்கொண்ட ஓர் ஆட்டுப்பண்ணையை அப்படியே இவ்வேழைக்கு அன்பளிப்பு செய்துவிட்டார்கள். இவ்வாறு வாரிக்கொடுக்கும் வள்ளண்மைகொண்ட ஞானி ஒரு

திக்காக எதையும் செய்யத்தயாராக உ நீண்டகாலமாகக் இல்லையே என்ற ஏ வாழ்ந்து கொண்டிருக் நிலையில் எனக்கொரு இருந்தால் அவனைக்கூ லாஹ்வுக்காகப் பலி தயங்கமாட்டேன்'' அந்த ஞானியிடம்கூறி நபி இப்ருஹிம் (அலை னைக்கூறும்போது பிள் கத்தால் கண்கள் பன இந்நிகழ்ச்சி அவர்களி வைச் சுற்றி வட்ட கொண்டிருந்தன. ''எ பிள்ளை பிறந்தால் அ வுக்காக அதனை அறுத் யிட்டு விடுவேன்'' நேர்ச்சை வைக்கும் அ நெஞ்சுரம் பெறச் செ அந்நிகழ்ச்சி.

ஆண்டுகள் பல செ ஏக்கம்அதிகரித்தது. இ எனக்குப்பின் என து யைத்தொடர்வதற்கு னெறிச் செல்வனைய யாக! என மனமுருகி சினார்கள். இறைநேசர் ஹிம் (அலை) அவர்கள் வர்களின் பிரார்த் ஏற்றுக்கொண்ட அ ஆலா அவர்களுக்கு அ றலையும் சகிப்புத்தன் யும் ஏற்றுக்கொண் லாஹ் தஆலா அவர் அறிவாற்றலையும் சகிப் மையையும் ஏற்றுவாழ ஒரு அழகிய ஆண் ம பெறப்போவதாக அ அறிவித்தான். அப்போ இப்ருஹிம் (அலை) அ டைய வயது 99ஆக இ இம்முதுமைப் பருவ மகன் பிறப்பனா? என கம் கொண்ட நபி இப் (அலை) அவர்கள் இ அல்லாஹ்வின் அருட் க கள் மீது நம்பிக்கையி


இஸ்லாமிய சகோதரத்துவத்தையும்
சமத்துவத்தையும் நிலைபெறச்செய்யும்
இனிய ஹஜ் தினத்தில்
எமது இதயம் கனிந்த
**ஹஜ் நல்வாழ்த்துக்கள்!**
சகலவிதமான
மின்னியல் பொருட்களுக்கு
**சுலைமான்ஸ்**
5, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்
போன் : 22165



சமத்துவமும், சகோதரத்துவமும் நிலைபெற
புனித ஹஜ் தினத்தில் அனைவரையும்
வாழ்த்துகின்றோம்
சுவைமிக்க ஐஸ்கிறீம், ஐஸ் சொக், சுவைத்து மகிழ்ந்திட
பிளவுஸ் ஐஸ்கிறீம், ஐஸ்சொக்
திருமணவைபவங்களுக்கும் மங்களகாரியங்களுக்கும் ''ஐஸ் புளொக்'' முன்கூட்டி ஒடர்பண்ணி பெற்றுக்கொள்ளலாம்.
40 வருடங்கள் முதன்மைபெற்ற ஸ்தாபனம்
**பிளவுஸ் ஐஸ்கிறீம் ஹவுஸ்**
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.



இஸ்லாமிய சமத்துவமும், சகோதரத்துவமும் நிலைபெறும் ஹ
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
**ஹஜ் நல்வாழ்த்துக்கள்!**
வட இலங்கையில் நாற்பது ஆண்டுகளாக கண்ணாடிவகைகளை இறக்கு
விற்பனை செய்யும் ஒரே நிறுவனம் ''ஜெஸீமா பிக்சர் பலெஸ்
**ஜெஸீமா பிக்ஸர் ப**
222, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போ
கிளை: ஜெஸீமாஸ் 95, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். போன் :


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித ஹஜ் சிறப்பு மலர்

## அவர்களின் புனித ஹஜ்

கேட்டார்: ''இப்ருஹிம்
) அவர்களே! உங்களிடம்
தனதயெல்லாம் ஈந்து
ர்களே தங்களுக்காக
ரயும் வைத்துக்கொள்ள
டாமா?'' உடனே அல்
வின் தோழர் இப்ருஹிம்
) அவர்கள், ''நான் இறை
க்காகவே வாழ்கிறேன்.
து திருப்தியையும், அன்
ம் பெறுவதற்காக இவற்
யல்லாம் நான் தர்மம்
கிறேன், இவைகளென்ன
வுக்காக அவனின் திருப்

மதியுடமையல்ல என்ற முடிவுக்குவந்தார்கள். தனக்கொரு மகன் பிறப்பான் அவன் மூலம் தமது பரம்பரை தழைத்து வளரும், நமது திருப்பணி தொடர்ந்து நடைபெறும் என மகிழ்ந்து அருள் நிறைந்த அல்லாஹ்வுக்கு அகம்நிறைந்த நன்றி செலுத்திஞர்கள். அல்லாஹ் நற்செய்தி அறிவித்தது போன்று அழகியதோர் ஆண் மகவை அன்னை ஹாஜரா (ரலி) அவர்கள் ஈன்றெடுத்

(6-ம் பக்கம் பார்க்க)

கா

ாக எதையும் தியாகம்
பத்தயாராக உள்ளேன்.
காலமாகக் குழந்தை
லயே என்ற ஏக்கத்தில்
ந்து கொண்டிருக்கும் இந்
ில் எனக்கொரு மகன்
தால் அவனைக்கூட அல்
வுக்காகப் பலியிடத்
கமாட்டேன்'' என்று
ஞானியிடம்கூறிஞர்கள்.
இப்ருஹிம் (அலை) இத
கூறும்போது பிள்ளை ஏக்
ால் கண்கள் பனித்தன.
கழ்ச்சி அவர்களின் நினை
சுற்றி வட்டமிட்டுக்
ண்டிருந்தன. ''எனக்குப்
ா பிறந்தால் அல்லாஹ்
ாக அதனை அறுத்துப்பலி
விடுவேன்'' என்று
சை வைக்கும் அளவுக்கு
சுரம் பெறச்செய்தது
கழ்ச்சி.

ண்டுகள் பல சென்றன.
ம்அதிகரித்தது. இறைவா!
குப்பின் எனது பணி
தொடர்வதற்கு ஒரு நன்
ிச் செல்வனையருள்வா
என மனமுருகி இறைஞ்
கள். இறைநேசர் இப்ரு
(அலை) அவர்கள் அன்ன
ளின் பிரார்த்தனையை
க்கொண்ட அல்லாஹ்
அவர்களுக்கு அறிவாற்
ும் சகிப்புத்தன்மையை
ஏற்றுக்கொண்ட அல்
தஆலா அவர்களுக்கு
ாற்றலையும் சகிப்புத்தன்
மையும் ஏற்றுவாழக்கூடிய
அழகிய ஆண் மகவைப்
ப்போவதாக அவரிடம்
ித்தான். அப்போது நபி
ஹிம் (அலை) அவர்களு
வயது 99ஆக இருந்தது.
துமைப் பருவத்திலே
பிறப்பனு? எனச்சந்தே
காண்ட நபி இப்ருஹிம்
) அவர்கள் இறுதியில்
ாஹ்வின் அருட்கொடை
மீது நம்பிக்கையிழப்பது

## முதலமைச்சர் வாழ்த்து

வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ.வரதராஜப் பெருமாள் (ஹஜ்) தியாகத் திருநாளையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச்செய்தி:

இப்ருஹீம் (அலை) என்னும் தந்தை, தன் மகன் இஸ்மாயிலை இறையோனுக்கு அர்ப்பணித்த தியாகத்தை நினைவு கூரும் திருநாளே 'ஹஜ்' திருநாளாகும். இத்திருநாளைக் கொண்டாடும் இஸ்லாமிய மக்களுக்கு குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் இஸ்லாமிய மக்களுக்கு தியாகத்தால் உதித்த வடக்கு கிழக்கு மாகாண அரசின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

''பேசும் மொழியாலும் குறிப்பிடக்கூடிய சில பண்பாட்டு அம்சங்களிலும் ஒன்றுபட்டிருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களை பிரிக்க முயற்சிக்கும் ஸ்ரீலங்கா அரசினை இனம் காண்பதுடன். எதிர்காலத்தில் எம்மக்களின் ஒற்றுமையை மேலும் வளர்க்கவேண்டுமென இப்புனித நாளில் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

''தமிழர்களும், முஸ்லிம்களும் புரிந்துணர்வோடும் ஒற்றுமையாகவும், வாழ்வதன்மூலமே, எமது உரிமைகளைப் பெற்று தலை நிமிர்ந்து வாழமுடியும்.

''வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் அமைதியாகவும், சமாதானமாகவும், ஜனநாயக சூழ்நிலையில் உரிமைகளைப் பெற்று தலை நிமிர்ந்து வாழும் நாள் வெகு தூரத்தில் இல்லையென்னும் நம்பிக்கையுடன் இத்திருநாளை மகிழ்ச்சியுடனும், நிறைவுடனும் கொண்டாடுவோம்.''


பெறும் ஹஜ் புனிதநாளில்
னவருக்கும் இனிய
ள்!
களை இறக்குமதிசெய்து
பிக்சர் பலெஸ்''
பலெஸ்
ம. போன் : 23127
போன் : 24167

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
உறவினர்கள் அனைவருக்கும்
ஹஜ் நல்வாழ்த்துக்கள்!
நீங்கள் விரும்பும் சகலவித மோட்டார் சைக்கிள்கள், கோயில் பாவனைக்குரிய வெண்கலப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்களுக்கு யாழ். நகரில் தன்னிகரில்லாத தலைசிறந்த ஸ்தாபனம்
ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ்,
297, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை: 76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள்
அனைவருக்கும்
இனிய ஹஜ் நல்வாழ்த்துக்கள்!
யாழ். நகரில் பிரபல்யம் வாய்ந்த
யன்னல் கண்ணுடி, மற்றும் படவியாபாரிகள்
கிளாஸ் எம்போறியம்,
192, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24170

இஸ்லாமிய சகோதரத்துவத்தையும்
சமத்துவத்தையும் நிலைநிறுத்தும்
ஹஜ் தினத்தில் எமது ஹஜ்
நல்வாழ்த்துக்கள்
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் பொதிகளை ஏற்றி இறக்குபவர்கள்.
கிளாஸ் ஹவுஸ்
ரான்ஸ் போட்டர்ஸ்
182, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
63, டாம் வீதி, கொழும்பு 12, போன்: 23746

இஸ்லாமிய சகோதரத்துவத்தை நிலைநிறுத்தும்,
புனித ஹஜ் தினத்தில் அனைவருக்கும்
இனிய ஹஜ் நல்வாழ்த்துக்கள்!






யாழ்ப்பாணத்தில்
கட்டிடப் பொருள்கள்,
இரும்புப் பொருள்கள்
அனைத்துக்கும்
டீன் ஸன் ஸ்,
DHEENSONS
66, [illegible]

அனைவருக்கும்
இனிய ஹஜ் நல்வாழ்த்துக்கள்!
அலங்கார அழகுசாதன பொருட்களுக்கும்,
திருமணப் பெண்களை அலங்கரிக்கும்
தலைநகை செட் வாடகைக்கு வழங்குபவர்கள்
முர்ஷிதா ரேட்ஸ்
75, பெரியகடை, யாழ்ப்பாணம்.

நண்பர்கள் வாடிக்கையாளர்கள் உறவினர்கள்
அனைவருக்கும் ஈதுல் அல்ஹா பெருநாள்
வாழ்த்துக்கள்
யாழ்நகரில் பிரபல்யம் பெற்ற
பொலித்தீன் விற்பனையாளர்கள்
ஆயிஷா றேடர்ஸ்
174, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24831
தலைமையகம்: மஜீத் ரெக்ஸ்ரைல்ஸ்
64, பெரியகடை யாழ்ப்பாணம்.
போன்: 22067

இஸ்லாமிய சகோதரத்துவத்தை நிலைபெறச்செய்யும் புனித ஹஜ்தினத்தில், வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இனிய ஹஜ் நல்வாழ்த்துக்கள்!
யாழ். நகரில்
அன்பளிப்பு, அலங்காரப் பொருட்களின் மாளிகை- ஷர்மிளாஸ்!
வெளிநாட்டுப் பொருட்களை தேவைக் கேற்றவாறு நியாயவிலையில் தெரிவு செய்வதற்கு------
ஷர்மிளாஸ்
(எம். ஓ. ஸன்ஸ்)
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய
ஹஜ் நல்வாழ்த்துக்கள்






வடபகுதியில் றினய் காஸ்
அடுப்புகளின் விற்பனையாளர்கள்,
LP Gas விநியோகஸ்தர்கள்
முகமதலி அப்துலலி
5, 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி இப்ருஹிம் (அலை) அவர்களின்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்கள்.

வயோதிப நிலையிலும் கூட தனக்குப்பிறந்த அந்தப்பாலகனை அன்போடு பேணி ஆதரவோடு வளர்த்துவந்தார்கள். மகனைப்பெற்ற மகிழ்ச்சியில் அந்த ஞான்யிடம் அன்று கூறியதைமறந்துவிட்டார்கள். மறைமுகமாக நேர்ந்து கொண்ட அந்நிகழ்ச்சி அவர்களின் நினைவிலிருந்து நீங்கியிருந்தது. குழந்தையோ நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர வளர அதன் அறிவும் விருத்தியடைய ஆரம்பித்தது. ஏறத்தாழ 13 வயதை எட்டிப்பிடித்து தனது தந்தைக்கு சின்னஞ்சிறு வேலைகளில் உதவி ஒத்தாசை புரியும் பருவ வயதை அடைந்ததும் அல்லாஹ்கு ஆலா நபி இப்ருஹிம் (அலை) அவர்களுக்கு அந்நேர்ச்சையை செயல்படுத்துவதற்காக தமது அருமைக்கும் பெருமைக்கும் உரித்தான புதல்வனை அறுத்துப் பலியிடுவது போன்ற ஒரு கனவைத் தோற்றுவித்தான். முதலில் கனவுதானே என்று நினைத்தாலும், தொடர்ந்து சில இரவுகள் அவ்வாறு கனவு கண்டபின் அந்நிகழ்ச்சி நினைவுத் திரையில் நிழலாடியது. அல்லாஹ்வின் கட்டளை தான் கனவின் மூலம் வெளிப்பட்டுள்ளது என்பதை அறிந்து தெளிவு பெற்ருர்.

மறுநாள் தமது அன்புச் செல்வனை நோக்கி; ''அருமைப்புதல்வனே உன்னை அறுத்துக் குர்பானி கொடுப்பதற்கு உண்மையிலேயே நான் கனவு கண்டேன். அவ்வாறு உன்னைப் பலியிட வேண்டுமென்பது ஆண்டவனின் கட்டளை என்பதை நான் தெளிவாக உணர்ந்துகொண்டேன். இது பற்றி நீ என்ன கூறுகிருய்?'' என்று கண்களில் நீர் சொரிய, நாத் தழுதழுக்க, சொற்கள் தடுமாற வினவினுர்கள். வள்ளல் இப்ருஹிம் (அலை) அவர்களின் எதிர்பாராத இக்கேள்வி இளைஞர் இஸ்மாயீலை அதிர்ச்சி பெறச் செய்யவில்லை.

''அன்புத் தந்தையே; தங்களுக்கிட்ட கட்டளை அவ்வாறிருந்தால் நீங்கள் அதனை நிறைவேற்றலாம். அதில் எந்த ஆட்சேபனையுமில்லை. அதற்கு நானும் தயாராகவே இருக்கிறேன். அக்கட்டளையை நீங்கள் நிறைவேற்றுங்கள. இன்ஸா அல்லாஹ பொறுமையாளனுகக் காண்பீர்கள்.'' என்றுநெஞ்சுயர்த்திக்கூறினுர். பிஞ்சுப் புதல்வர் இஸ்மாயீல் (அலை) அவர்கள். அவரது இனிய வார்த்தைகளில் வீரமும், தீரமும், உறுதியும், பொறுமையும், தியாகமும் பளிச்சென ஒளி வீசின.

இவ்வார்த்தையைக் கேட்டதும் நபி இப்ருஹிம் (அலை) அவர்கள் புத்துணர்ச்சியும், புதுவாற்றலும் பெற்றவாரக, கூரிய கத்தியும், கயிறும் எடுத்துக்கொண்டு பலிபீடத்தை நோக்கி இன்பத் திருமகன இஸ்மாயீலை அழைத்துச் செல்லும்போது தாம் நிறைவேற்றப்போகும் கடமையைப் பற்றி அன்புத் துணைவி ஹாஜிரா (ரலி) அவர்களிடம் அறிவித்தார். 10 மாதம் சுமந்து பெற்றெடுத்த வயிறு பற்றி எரியவில்லை. எண்ணற்ற இன்னல்களை ஏற்று, இரவு பகல் உறக்கமின்றிப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்த அந்தப் புதல்வனை அறுத்துப் பலியிடுவதா? என மறுத்துரைக்கக்கூட இல்லை. அன்புச் செல்வனை அடிப்படையாகவைத்து தான் கட்டிய மனக்கோட்டைகள் சரிந்து மண்ணுகிவிட்டது என்று மனம் கலங்கவில்லை; மாரடிக்கவில்லை. தனது மகவைப் பலி கொடுத்து, ஏக இறைவனின் ஏவலை நிறைவேற்றுவதன் மூலம் கணவனின் வாக்கைக் காப்பாற்ற நெஞ்சுரம் கொண்டார். அன்னை ஹாஜிரா (ரலி) அவர்கள்.

அதுமட்டுமல்ல, தமது பாசத்திற்குரிய மகனை அழைத்து, மடிமீது இருத்தித் தலைவாரி, தூய ஆடைகள் அணிவித்து, வாசனை பூசி, வாரி அணைத்து, வாஞ்சைமிகு முத்தங்கள் பல பொழிந்தார். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் ஆணையை நிறைவேற்றுவாதற்காக வேண்டித் தந்தையையும் தனயனையும் தயக்கமின்றிஅனுப்பி வைத்தார்.

மாபெரும் கடமையை நிறைவேற்றப்போகிருேம் என்ற பெருமிதம், தியாகத்தின் மறுபெயரான அம்மூவர் நெஞ்சங்களிலும் நிறைந்திருந்தது. இதோ இளைஞர் இஸ்மாயீலும் இறைதூதர் இப்ருஹீம் (அலை) அவர்களும் களம் நோக்கிப் புறப்படுகின்தனர். வழி நடுவினில் மனித இனத்தின் பிறவிப் பகைவனுன இப்லீஸ் குறுக்கிடுகின்ருன். அவனுல் இளைஞர் இஸ்மாயீலின் நெஞ்சத்தையோ, இறைநேசர் இப்ருஹிம் (அலை) அவர்களின் தூய எண்ணத்தையோ திசை திருப்ப முடியவில்லை. கல்லடிபட்டு விரண்டோடிய மங்கையர்க்கரசி அன்னை ஹாஜிரா (ரலி) அவர்களிடம் ஓடுகின்ருன் அவன். நினைத்தது போன்று அப்பெண்மணியின் உள்ளத்தைக்கூட மாற்றமுடியாமல் போய்விட்டது. அங்கும் அப்பெண்மணியின் கரங்களால் கல்லடிபட்டு, மூக்குடைபட்டுத் திரும்பிவிட்டான்!

தந்தை இப்ருஹீம் (அலை) அவர்களின் உறுதியான உள்ளத்தை உடைக்க வந்த விரோதி இப்லீஸின் சூழ்ச்சிகள் பற்றியும், மலை சரிந்தாலும் நிலை குலையாத அளவுக்கு அல்லாஹ்வின் ஆணையை நிறைவேற்றுவதில் அவருக்கு இருந்த நெஞ்சுறுதியையும் நினைத்துப் பார்ப்பதற்காகவே இன்றும்கூட இஸ்லாத்தின் இறுதிக் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றச் செல்லும் ஹாஜி மக்களுக்கு ஏழு கற்களை எறிவது ஒரு கடமையாக ஆக்கப்பட்டுள்ளது.

வீணன் இப்லீஸை வீழ்த்தி வெற்றிகொண்ட இருவரும் பலிபீடத்தை அடைந்தார்கள். தந்தையோ தம் அருமைப் புதல்வனைத் தரையிலே கிடத்திஞர். மண்ணிலே மல்லாந்து கிடந்த அருமைப் புதல்வன் தந்தையை நோக்கி; ''என் அருமைத் தந்தையே! நீங்கள் என்னை அறுக்கும்போது என் கை, கால்களை நான் உதறினுல், உங்கள் புனித ஆடைகள் மீது உதிரம் பட்டுக் கறை படிந்துவிடும். ஆகையினுல் என் கை, கால்களை இறுகக் கட்டிக்கொள்ளுங்கள்'' என்று பாச மொழி பகர்ந்தான். இதன்படியே கைகளும் கால்களும் கட்டப்பட்டன. கத்தியோ அழகான முறையில் தீட்டிக் கூர்மையாக்கப்பட்டது. இதோ! கண்ணுக்கினிய கண்மணி இஸ்மாயீல் (அலை) அவர்களின் கழுத்திலே கத்தியையும் வைத்துவிட்டார்கள். அறுக்கின்ருர்கள் தம் அருமைப் புதல்வனின் கழுத்தை. ஆனுல் கத்தியோ அறுக்க மறுக்கவே தமது முழுப் பலத்தையும் வரவழைத்து பலங்கொண்டமட்டும் கத்தியை அழுத்தி இழுத்தார்கள். அவைகள் எதுவுமே பலனளிக்காமல் போய்விட்டது. வள்ளல் இப்ருஹிம் (அலை) அவர்களோ வியந்தார்கள். தமது உறுதி தளர்ந்துவிட்டதே என்று பயந்தார்கள்.

தமது இலட்சியத்திலே உறுதிபூண்டவராகக் கைகளிலே பலத்தை வரவழைத்துக் கொண்டு மீண்டும் முயற்சித்தார்கள். அப்போது, அவ்வருமைக்கும், பெருமைக்குமுரிய இளைஞர் இஸ்மாயீல் தந்தையை நோக்கி, தந்தையே! என்னை மல்லாந்தபடி கிடத்திவிடுவதால் என் முகத்தைப் பார்க்கும்போதுஉங்கள்பெற்ற மனம் துடிக்கின்றது. அவ்வேதனையோ தங்களின் உறுதியான எண்ணத்தைக் குலைத்து உடல் வலுவைத் தளரச்செய்யலாம். எனவே, என்னை முகங்குப்புறக் கிடத்துங்கள்; கட்டப்பட்டிருக்கும் என் கரங்களையும், கால்களையும் அவிழ்த்துவிடுங்கள் என்று மகன் தொடர்ந்தும், ''என்னை நீங்கள் கட்டிப்போட்டு அறுப்பதால் மலக்குகளோ, ''இஸ்மாயீல் இக்கட்டளைக்கு இணங்கவில்லை ஆதலின் கை, கால் கட்டப்பட்ட நிலையில்வைத்து அவருடைய தந்தை அறுக்கிருர்'' என எண்ணிவிடுவார்கள் என்று நான் அஞ்சுகிறேன்; வெட்கப்படுகிறேன். தயை கூர்ந்து என் கட்டுகளை அவிழ்த்துக் குப்புறக் கிடத்தி அறுங்கள். நானே கதறவோ, கை, கால்களை உதறவோமாட்டேன்'' எனத் தாழ்மையாகவும் செல்ல மொழிகளாலும் சொல்லிமுடித்தார், தியாகத்தின் சிற்பி இஸ்மாயீல் (அலை)

அருமைப் புதல்வனின் மன உறுதியையும், வேண்டுகோளையும் ஆதரித்த இறைநேசரோ மகனின் கை, கால் கட்டப்பட்டிருந்ததை அவிழ்த்து மகனைக் குப்புறக் கிடத்தி, கத்தியை மீண்டும் கூர்மையாக்கி, தமது உடலிலுள்ள பலத்தையெல்லாம் கைகளுக்கு வரவழைத்து தேக்கி வைத்துக்கொண்டு மீண்டும் அறுத்தார்கள் வள்ளல் இப்ருஹிம் (அலை) அவர்கள். ஆனுல் கூரிய கத்தி கழுத்திலே ஒரு வெங்காயச் சருகின் அளவுகூடப் பதியவில்லை. அக்கழுத்திலே சிறு காயமோ, இரத்தமோ எதனையும் காணவில்லை. ஆவேசமும், ஆத்திரமும் தலைக்கு மேலிட்டுப் பொங்கியெழுந்தது. உடனே அக்கத்தியை வீசியெறிந்தார்கள். ஒரு கற்பாறைமீது விழுந்த அக்கத்தி அப்பாறையை இரண்டாகப் பிளக்கவைத்தது. கரும்பாறையைப் பிளக்கச் செய்த அக்கத்திகு இஸ்மாயீலின் மென்மையான கழுத்தை அறுக்கச் சக்தியில்லையா? இப்ருஹிம் (அலை) அவர்களின் இந்த வினுவுக்கு அக்கத்தியே விடை பகர்கின்றது.

ஆம்; அக்கத்திக்கே பேசக்கூடிய ஆற்றல் கிடைக்கிறது. பேசுகிறது. அல்லாஹ்வே அதனைப் பேசவைக்கின்ருன்.

''இறைநேசர் இப்ருஹிம் (அலை) அவர்களே! எனக்கோ என்னைப் படைத்த எஜமான் ''அறுக்காதே'' எனக் கட்டளையிட்டிருக்கின்ருன். அவனின் அன்பரான தாங்களோ! என்னை அறுக்கும்படியே ஏவுகிறீர்கள். நான் அறுக்கவில்லை என்பதற்காக என்னைத் தூக்கி எறிந்துவிட்டீர்கள். அல்லாஹ்வின் நபியாகிய உங்களைவிட மாண்புமிக்க அல்லாஹ்வின் கட்டளைக்கே முக்கியத்துவம் கொடுத்துவிட்டேன். அறுக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். மேலும் அகிலத்தின் அருட்கொடை அண்ணல் முகம்மது (ஸல்) அவர்களின் திவ்விய ஒளிச்சுடர் இளைஞர் இஸ்மாயீலின் திருவதனத்திலே இலங்குவதை நான் காணுகின்றேன். இந்நிலையில் நான் எவ்வாறு அறுக்கமுடியும்? எந்த இறைவனின் ஆணையை நிறைவேற்றுவதற்குத் தங்களின் அருமைப் புதல்வனையே பலியிடுவதற்கு முன்வந்தீர்களோ! அதேஇறைவனின் கட்டளையை நான் எவ்வாறு மீறமுடியும்?'' என்று அழகிய முறையில் அக்கத்தி ஒரு குட்டிப்பிரசங்கமேசெய்து முடித்தது. அடுத்த விஞடியோ அல்லாஹவின் மறுகட்டளை பிறக்கின்றது.

''இப்ருஹிமே! நீர் உண்மையிலே உமது கனவை மெய்ப்பித்துவிட்டீர். உமது மகனைக் கீழே கிடத்திக் கத்தியைக் கழுத்திலே வைத்தவுடன் உமது இலட்சியம் நிறைவேறிவிட்டது. உமது தியாகத்தை மெச்சினேம். நிச்சயமாக இது ஒரு வெளிப்படையான சோதனையாகும். நல்லெண்ணம் கொண்டவர்களுக்கே நற்சோபனம் என்றெல்லாம் இப்ருஹிம் (அலை) அவர்களைப் புகழ்ந்துரைக்கின்ருன். அவனின் திருமறையிலே மேலும், உமது செல்வப் புதல்வன் இஸ்மாயீலுக்குப்பதிலாகப் பெரியதோர் ஆட்டைக் குர்பாணி செய்யும்படி பலியாக்கினேம். இவ்வாறே நாம் நன்மைசெய்பவர்களுக்குக் கூலி வழங்குவோம்'' என்று அல்லாஹ்வின் அமுதவசனங்கள் இறைநேசர் இப்ருஹிம் (அலை) அவர்களின் செவிகளில் ஒலித்தன.

திரும்பினுர்கள் தியாகி இப்ருஹிம் (அலை) அவர்கள். வானவர் திலகம் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அழகியதோர் ஆட்டுக்கடாவுடன் அங்கே காட்சியளித்தார்கள். கண்ணுக்கினிய நிறமும், கொழு கொழுவென்ற தோற்றமும், முறுக்கேறிய கொம்புகளும் அமையப்பெற்ற அந்த ஆட்டுக்கடாவைச் சுட்டிக்காட்டி, ''தியாகத்தின் திருவுரு இப்ருஹிம் (அலை) அவர்களே! இதோ தங்களின் அருமைப் புதல்வனுக்குப் பதிலாகப் பலியிடுவதற்கு அல்லாஹ் அருளிய ஆடு! இதனையே அறுத்துக் குர்பானி பானி கொடுங்கள்'' என்று கூறி அதனை வினயத்தோடு சமர்ப்பித்தார்.

அல்லாஹ்வின் அருட்கொடைகளை எண்ணி மன மகிழ்ந்த நபி இப்ருஹிம் (அலை) அவர்கள் அல்லாஹு அக்பர் எனத் தக்பீர் முழக்கம் செய்தார்கள். அதனைத் தொடர்ந்தே இளைஞர் இஸ்மாயீல் (அலை) அவர்களும், வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களும் தக்பீர்களை இனிய வார்த்தைகளால் முழக்கினர். அருமைத் திருமகனை அறுத்துப் பலியிடத் தீட்டிய அக்கத்தியால் அல்லாஹ் அன்பளிப்புச்செய்தஅவ்வாட்டை அறுத்துக் குர்பானி செய்தார்கள். ஆனந்தக் கண்ணீர் ததும்ப அன்புமகன் இஸ்மாயீலை ஆரத்தழுவி முத்த மழை பொழிந்தார்கள்.

# யாழ். மாவட்டத்தில் கிராமசேவை அலுவலர் பற்றுக்குறை!

(சுன்னுகம்)

கிராமசேவையாளர்நியமனத் திட்டததின்படி யாழ். மாவட்டத்தில் சுமார் 200 கிராம சேவையாளர்களுக்கு பற்றுக்குறை நிலவுவதாக அறியப்படுகிறது.

250 குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவையாளர் என்ற விகிதத்தில் செயல்படுவதற்காக சேவையிலிருக்கும் கிராம சேவையாளர்களுடன், பதவி மாற்றம் செய்யப்பட்டவர்களும் இத்திட்டத்தில் கிராம சேவையாளர்களாகச்சேர்க்கப் பட்டனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள ஒரு லட்சத்து அறுபதிஞயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கும் இந்த விதத்தில் 650 கிராமசேவையாளர்கள் நியமிக்கப்படவேண்டும். ஆனுல் மாவட்டம் முழுவதும் தற்போது 454 கிராமசேவையாளர்கள் மட்டுமே உள்ளனர். (77)

# "மாணவர்கள் சிந்தனையுள்ளவர்களாகத் திகழ வேண்டும்"

(புலோலி)

''மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் உருவாகும்நிலை மாறி, அவர்கள் சகல வழிகளிலும் சீரிய சிந்தனை உள்ளவர்களாகவும், தலைமை தாங்கும் திறன் உள்ளவர்களாகவும் வாழ வழி வகுக்கப்படவேண்டும்.''

இவ்வாறு வடமராட்சி சர்வோதய நிலையத்தில் நடைபெற்ற இலவச சங்கீதப்பயிற்சி வகுப்புக்களில் பயிலும்மாணவ மாணவிகளை ஒன்றிணைத்து சர்வோதய சங்கீத மாணவர் மன்றத்தை அங்குரார்ப்பணஞ் செய்துவைத்துப் பேசிய வடமராட்சி சர்வோதய இணைப்பாளர் திரு. ப. தில்லைநாதன் கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது; ''இளைய சமுதாயத்தினரின் உள்ளங்களில் எத்தனையோ விதமான திறமைகள் தேங்கிக்கிடக்கின்றன. இவை வெளிக்கொணர வழியமைத்துக் கொடுக்கப்படவேண்டும். மேடைக் கூச்சம் எத்தனையோ திறமைகளை குழிதோண்டிப் புதைக்சின்றது, சர்வோதயப் பாசறையில் பயிலும் மாணவர்கள் இதிலிருந்து விடுபட வேண்டும். இலத நோக்கமாக வைத்தே இப்படியான மன்றங்களை நாம் அமைத்துவருகிருேம். இம்மன்றங்களின் மூலம் எம் மொழி, பண்பாட்டுக் கலாசாரங்களையும் நாம் வளர்க்கமுடியும்;''

இம்மன்றத்தின் உத்தியோகத்தர் தெரிவில் தலைவராக செல்வி ரஜனியும், செயலாளராக செல்வி சுமித்திராவும், பொருளாளராக செல்வி சாந்தினியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# பெற்ருேல் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று பெற்ருேல் விநியோகம் செய்யப்பட்டது. மோட்டார் சைக்கிளுக்கு இரண்டு லீற்றர் வீதமும், கார்களுக்கு ஐந்து லீற்றர் வீதமும் பெற்ருேல் வழங்கப்பட்டது.

# சட்டவிரோத மின்பாவனை

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு பகுதியில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளது.

இதனுல் சட்டபூர்வமான மின்பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (140)

# திருச்சொரூப பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

அன்னை வேளாங்கன்னியின் திருச் சொரூபம் ஊர்காவற்றுறை துறைமுகப் பகுதியில் ஊர்காவற்றுறை பங்குத் தந்தை அருட்திரு கிருபானந்தன் அடிகளால் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. 35 ஆயிரம் ரூபா செலவில் ஊர் மக்களால் இச் சொரூபம் உருவாக்கப்பட்டது. வைபவத்தில் பொது மக்களால் அன்ன தானமும் வழங்கப்பட்டது.

# நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

முறைசாரக் கல்வி 'வள நிலையத்துக்கு' பல நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. தொழில் நுட்பம், சிறு கைத்தொழில் சம்பந்தமான நூல்கள் பலவற்றை தொழிலதிபர் திரு. க. கனகராசா அன்பளிப்பு செய்துள்ளார்.

இதேபோல கைத்தொழில் அபிவிருத்திசபையும் நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது. (ஐ)

# பிரயாணிகள் பாதிப்பு

(நெடுந்தீவு)

நாட்டில் ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடு காரணமாக நெடுந்தீவு பிரயாணிகள் படகுச் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சேவை, இவ்வாரத்தில் இருந்து திங்கள், புதன், வெள்ளி, சனி ஆகிய நான்கு தினங்களில் மட்டும் நடைபெறுமெண அறிவிக்கப்படுகின்றது.

இச்சேவைக் குறைப்பால் பிரயாணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் புரட்சிக் கொண்டாட்டத்தை எதிர்த்து

# பெரும் ஆர்ப்பாட்டம்!

## உலகத் தலைவர்களின் பாதுகாப்பில்

## 30 ஆயிரம் படையினர்

(பாரிஸ்)

**பிரெஞ்சுப் புரட்சியின் 200வது ஆண்டுக் கொண்டாட்டத்தை எதிர்த்து சுமார் 20,000 மக்கள் பாரிஸில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தியுள்ளனர். இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் பாரிஸில் கூடும் உலகத்தலைவர்கள் பலருக்கும் எதிராகவும் அமைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பிரெஞ்சுப் புரட்சியின் 200வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாரிஸில் நடைபெறும் பெரும் கொண்டாட்டங்களை பிரான்ஸில் ஆயிரக்கணக்கான மக்கள் எதிர்த்துள்ளனர். இதில் பிரான்ஸ் அதிபர் திரு. மித்தரோனுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளது.

இக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள உலகநாடுகளின் முக்கிய தலைவர்கள் முப்பது பேர் பாரிஸ் வந்துள்ளனர். இங்கு அவர்கள் நான்கு அல்லது ஐந்து நாட்கள் தங்கியிருப்பர். இக்காலப்பகுதியில் பல முக்கிய பேச்சுவார்த்தைகளிலும் இவர்கள் ஈடுபடுவர்.

இங்கு வந்துள்ள தலைவர்களின் பாதுகாப்பை முன்னிட்டு பல முன்னேற்பாடான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக கடந்த நான்கு ஐந்துநாட்களுக்குமுன் பெரும் பாதுகாப்பு ஒத்திகை நடவடிக்கையும் இடம்பெற்றது.

பாதுகாப்பு கடமைகளில் சுமார் 30,000 படைவீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்காக பலஹெலிகாப்டர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகளின் தாக்குதல்கள் இடம்பெறலாமென தலைவர்கள் செல்லும் பாதைகள் எங்கும் பெரும் பந்தோபஸ்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விழாக்கள் நடைபெறும் மேடைகள், அரங்கங்களுக்கு பலத்த பாதுகாப்புகள் வழங்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகளின் தொலைபேசி எச்சரிக்கைகளும் பொலிசாருக்குக் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படடுள்ளது.

### மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி துர்க்கையம்மன் மகோற்சவம் இம்மாதம் 23ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 31ம் திகதி தேர்த்திருவிழாவும் ஆகஸ்ட்மாதம் முதலாம்திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

## பத்திரிகைத் தணிக்கைக்கு பத்திரிகையாளர் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளியில் அனுப்பப்படும் ஒவ்வொரு செய்தியும் இலங்கை அரசினால் தணிக்கை செய்யப்படுவது குறித்து இங்குள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசைக்கண்டித்து வெளிவந்த இச்செய்தியையும் அரசு தணிக்கை செய்த பின்னரே வெளியிட அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அவசரகால தடைச்சட்டத்தின்கீழ் பத்திரிகைத்தணிக்கை அமுல் செய்யப்பட்டதை அடுத்து வெளிநாட்டு பத்திரிகைகளுக்கும் இச்சட்டம் பொருந்துமென அறிவிக்கப்பட்டதும் தெரிந்ததே.

### குருபூர்ணிமா தினம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சத்திய சாயி பாபாசமிதியில், குருபூர்ணிமா தினம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

அன்று காலை எட்டுமணியளவில் நடைபெறும் கொடியேற்ற வைபவத்தைத் தொடர்ந்து, பாதபூசை, அர்ச்சனை, பஜனை இடம்பெற்று, கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## மே. ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

[பொன்]

மேற்கு ஜெர்மனியில் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் முதல் ஆறுமாத காலத்தை விட இந்த வருடத்தின் ஆறுமாத காலத்தில் 45 சதவீதம் அதிகரித்துள்ளது. அரசியல் தஞ்சம்கோரி இலங்கையர்களும் அதிகளவில் விண்ணப்பம்செய்துள்ளனர்.

அண்மையில் மேற்கு ஜெர்மன் உள்விவகார அமைச்சர் திரு. வொல்ப் காங் செயுபல் தமது நாட்டில் தஞ்சம் கோருவோர் குறித்து வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

இந்த வருடத்தின ஆறுமாத காலத்தில் மொத்தம் 57 ஆயிரத்து 822 பேர் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருக்கின்றனர்.

போலந்து, துருக்கி, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

1988ம் ஆண்டின் முதல் ஆறு மாதகாலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தத் தொகை 45 சதவீதம் அதிகமானதாகும்.

கடந்த ஜூன் மாதம்வரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களில் ஆறுசதவீத விண்ணப்பதாரிகள் மாத்திரமே அரசியல் தஞ்சம்பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

அரசியல் தஞ்சம் கோருவோரில் அதிகமானோர் சட்ட நடவடிக்கைகளிலிருந்து தப்புவதற்காக நாட்டைவிட்டு வெளியேறுபவர்களாயில்லாமல் நல்லதொரு வாழ்க்கைத் தரத்தைப் பெறும் நோக்குடனேயே இருப்பதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது.

### உரித்தாவண பத்திரம்

(மட்டுவில்)

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குடியிருப்பாளர்களுக்கு உரித்தாவண பத்திரம் வழங்கும் வேலைகள் நடைபெற்றுவருகிறது.

தென்மராட்சிப்பிரிவிலுள்ள சகல கிராமசேவை அலுவலர்களும் தமது பிரிவிலுள்ள உணவு முத்திரை பெற்றுள்ள சகல குடியிருப்பாளர்களுக்கும் இந்த வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் உரித்தாவண பத்திரத்தை வழங்கிவருகிறார்கள்.

## சோவியத்தில் பெண்களாக மாறிய 50 ஆண்கள்!

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் சுமார் ஐம்பது ஆண்கள் பெண்களாக மாறியுள்ளனர். இத்தகவலை மாஸ்கோ வானொலிதெரிவித்துள்ளது.

மேற்படி ஐம்பது ஆண்களும் தாம் பெண்களாக மாறவேண்டுமென விரும்பிக் கொண்டதன் பேரில் வைத்தியசாலையில் இவர்களுக்கு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து இந்த ஐம்பது பேரும் பெண்களாக மாறியுள்ளனர். இதற்கான சத்திர சிகிச்சைக்கு பெருமளவு பணம் செலவழிக்கப்பட்டுள்ளது.

சோவியத்தில்இவ்வாறான விநோதமான பல சத்திர சிகிச்சைகள் கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## ‘எமது பிரதேசத்தில் இன்றும் தொற்றுநோய் பரவுகிறது’

(தெல்லிப்பழை)

எமது பிரதேசத்திலே தொற்றுநோய்கள் இன்றும் பரவிக்கொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்குச் சுகாதாரப் பகுதியினர் ஆகிய நாம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றோம்.

இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணத்திலருந்து தெரிவு செய்யப்பட்ட சுகாதாரக் கல்வி அதிகாரிகளுக்கான மூன்று மாதகால பயிற்சியை பிராந்திய தொற்றுநோய்த் தடுப்பு நிபுணர் டாக்டர் திரு. சி. விஜயராசா ஆரம்பித்துவைக்கும் போது தெல்லிப்பழை சுகாதார வைத்தியப் பிரிவு மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

எமது பிரதேச மக்கள் சுகாதாரத்தை நல்லமுறையில் பேணுததற்கு ஒரே காரணம் சுகாதாரம் பற்றிய அறிவு மக்களுக்குப் போதாமைதான்.

சுகாதார அறிவை மக்களுக்கு எவ்வளவு இலகுவான முறையில் புகட்டமுடியுமோ அவ்வாறு செய்வதற்காகத்தான் சுகாதாரக் கல்வியை இவர்களுக்கு அளிக்க உள்ளோம்.

இன்று யாழ். மாவட்டத்தில் ஒரே ஒரு சுகாதாரக் கல்வி அதிகாரி மட்டும் பணியாற்றுகிறார். ஆனால் இன்று வடக்கு, கிழக்கிலிருந்து எட்டுப் பேர்களைத் தெரிவுசெய்து மூன்று மாதகாலப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

வவுனியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மாணிக்கம். தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் யாழ். மாவட்ட சுகாதாரக் கல்வி

(8ம் பக்கம் பார்க்க)

நியூசாந்தி யாழ்நகர்
10-30, 2-30 மணிக்கு
மோகன், ரேவதி
குங்கும சிமிழ்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
7-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்-நதியா
நடித்த
சின்னத்தம்பி
பெரியதம்பி

## இராணுவம் - கெரில்லாக்கள்

## தாய்லாந்து கிராமத்தில் மோதல்!

### பலத்த உயிர்ச் சேதம்

(ரங்கூன்)

தாய்லாந்து எல்லைக்குள் ஊடுருவி அங்குள்ள கிராமமொன்றை சுற்றி வளைத்த பர்மிய துருப்புக்களுக்கும் பர்மிய கெரில்லாக்களுக்குமிடையே இடம்பெற்ற கடும் சண்டையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பர்மாவில் இடம்பெற்று வரும் அரசு எதிர்ப்புக் கெரில்லாக்களின் ஆதிக்கம் கூடிய பர்மிய கரையோர பிரதேச கிராமங்களுள் திடீரென 500 பர்மிய அரசுத் துருப்புகள் முற்றுகையிட்டன.

இதையடுத்து அப்பகுதியிலிருந்த கெரில்லாக்கள் ஆயுதங்களுடன் எல்லை நாடான தாய்லாந்துக்குள் தப்பி ஓடினர். ஓடிய கெரில்லாக்களைத் துரத்திச் சென்ற துருப்புகளுக்கும் கெரில்லாக்களுக்கு மிடையில் தாய்லாந்தின் எல்லைப்புற கிராமங்களில் கடும் மோதல் இடம்பெற்றது.

பல மணி நேரம் இடம்பெற்ற இம்மோதலில் இரு தரப்பிலும் பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டதாகவும் தாய்லாந்து மக்களும் இத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பர்மிய துருப்புக்களின் இந்த நடவடிக்கைகளை தாய்லாந்து கண்டித்துள்ளது. இதனையடுத்து இரு நாடுகளினதும் உறவில் விரிசல் நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆயிரம் ஆசிரிய பயிலுநர்: 8-ம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

புதிதாகத் தெரிவு செய்யப்படவிருக்கும் 25,000 ஆசிரிய பயிலுநர்களுக்கான விண்ணப்பங்கள் இன்று முதல் ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன.

இது தொடர்பான விபரங்கள் இன்று வெளியிடப்படும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இந்த ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

## எமது பிரதேசத்தில்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி கா. வைத்தீஸ்வரன் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை அதிபர், டாக்டர் எஸ். பத்மநாதன் உட்படப் பலர் உரைநிகழ்த்தினார்கள்.

## கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி அறிக்கையில் மேலும் கூறப்படுவதாவது:

''சென்ற வாரம் அமெரிக்கஸ் தானிகராலயத்தைச் சேர்ந்த உயர் இராணுவ அதிகாரி ஒருவர் காரைநகர் கடற்படைத்தளத்திற்குச் சென்று அங்குள்ள சுற்றுடல், சூழ்நிலைகளை நேரில் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இந்த அமெரிக்க இராணுவஅதிகாரியுடன் இலங்கைக் கடற்படையின் உயர் அதிகாரிகளும் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

''ஆயிரம் மீற்றர் வலயக் கட்டத்தின்போது பலாலி இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டது. இம் முகாம் விஸ்தரிப்பின் பின்னரே தமிழர்களை அழிக்கும் நடவடிக்கையை 'லிபறேசன் ஒபரேன்' என்னும் பெயரால் மேற்கொண்டது என்பதை தமிழ் பேசும் மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அந்நடவடிக்கையால் பல ஆயிரம் ஏக்கர் செழிப்பான விவசாய நிலம் பறிமுதல் செய்யப்பட்டு அந்நிலத்தில் வாழ்ந்தவர் இருக்க இடமின்றி, அகதிகளாக, எவ்வித தொழிலுமின்றி நிர்கதியாக்கப்பட்டதை இச்சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகின்றோம். இதேபோன்றுதான் காரைநகர் கடற்படைத்தளம் விஸ்தரிக்க முற்படும்போது ஆலடி, கருங்காலி, பல காட்டுச்சந்தி, நாச்சிமார் கோவிலடி, கிட்டங்கிப் பிள்ளையார்கோவிலடி, வாரிவளவு, சின்னாலடி போன்ற பகுதிகள் உள்ளடக்கப்பட்டு இப்பகுதி மக்கள் வெளியேற்றப்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

''கடந்த காலத்தில் தமிழ் பேசும் மக்களின் பூரண ஆதரவுடனும், ஆயிரக்கணக்கான இளைஞர்களின் தியாகத்தின் மூலமும் பெற்ற பலாபலன்களை, இலங்கை அரசுடன் கைகோர்த்துக் கொண்டே ஏகாதிபத்தியத்துக்குத் தாரை வார்க்க முற்பட்டுள்ளவர்களை இனம்காண்பதுடன், இலங்கை–இந்திய ஒப்பந்தத்தினூடாக பெற்ற வடக்கு–கிழக்கு மாகாண அரசை மேலும் வலுவுள்ளதாக மாற்றி, அதன் மூலம் எமது நோக்கங்களை அடைய தமிழ் பேசும் மக்கள் எமக்கு பூரண ஆதரவு வழங்கவேண்டும்.

''தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தினூடாக தென்கிழக்கு ஆசியாவை கபளீகாரம் செய்ய முயலும் ஏகாதிபத்திய சக்திகள் நேரடியாகவும், தமிழ்க் குழுக்கள் மூலமாகவும் ஊடுருவியுள்ளதை இன்று நிதர்சனமாகக் காணமுடிகிறது. ஆகவே ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளும், முற்போக்காளர்களும், நாட்டுப்பற்றுமிக்கவர்களும் ஐக்கியப்பட்டு எமது பாரம்பரிய பிரதேசத்தை எமக்குரியதாக்குவதில் ஒன்றுபட்டுச் செயலாற்றுவோம்.''

## அமைதிப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜி. தேஷ்முக் மூலம் நேற்று முன்தினம் திரு. ராஜீவ் காந்தி அனுப்பியிருந்த கடிதத்துக்கு ஜனாதிபதி திரு. பிரேமதாசா நேற்று தமது பதில் கடிதத்தை அனுப்பிவைத்தார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான சட்டங்களை நிறைவேற்றும் விடயம் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு முன் உள்ளவிடயம். இதனை நான் இந்திய தூதுக்குழுவிடம் விபரமாக விளக்கிக் கூறியுள்ளேன்,

''இந்திய அமைதிப்படை இலங்கை ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே இலங்கைக்கு வந்தது. எனவே இலங்கை ஆயுதப்படைகளின் பிரதம தளபதி என்ற வகையில் இந்தியத்துருப்புகள் இலங்கை ஜனாதிபதியின் ஆணைக்குக் கட்டுப்படவேண்டும்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் இருநாட்டு அரசுகளுக்கு மிடையிலேயே செய்துகொள்ளப்பட்டது. வேறு எந்த இயக்கமும் இதில் சம்பந்தப்படவில்லை.

''இலங்கையின் ஐக்கியம் ஒருமைப்பாடு, பாதுகாப்புக்குத் தீங்கு ஏற்படக்கூடிய நடவடிக்கைகளை இந்திய மண்ணிலிருந்து எவரும் மேற்கொள்ள இடமளிக்கமாட்டாதுஎன இந்திய அரசு முன்னர் உறுதி அளித்தது. ஆனால் இந்திய அமைதிப் படையினர் இலங்கையில் இருக்கவேண்டும் என்று சிலர் இந்திய மண்ணிலிருந்து பிரசார இயக்கம் நடத்தி வருகின்றனர்.

''ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட 48 மணித்தியாலத்தில் வன்முறைகள் ஓய்ந்துவிடும் என்றும் வன்முறைகள் ஓய்ந்த 72 மணித்தியாலத்தில் ஆயுதங்கள் அனைத்தும் கையளிக்கப்பட்டுவிடும் என்றும் உறுயளிக்கப்பட்டமையினாலேயே இந்திய இராணுவம் இங்கு அழைக்கப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் இந்திய அமைதிப் படையினர்தொடர்ந்தும் தனது அதிகாரத்தை இங்கு பயன்படுத்த உரிமை பெற்றிருக்கிறது என எவரும் வியாக்கியானம் அளிக்கமுடியாது.

இந்திய அமைதிப்படை தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது அனுவசியம், அமைதிப் படையின் இராணுவ நடவடிக்கைகள், பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தடையாகவே இருக்கிறது.

அமைதிப்படை இங்கு தங்கியிருப்பதால் நாட்டில் வன்செயல்கள் அதிகரித்து நெருக்கடிநிலை உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

அமைதிப் படையினால் ஏனைய அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தமுடியாதநிலையிலும் நான் இருக்கிறேன்''.

# புதிய கட்டிடம் நேற்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

வட-இலங்கை மருத்துவக் கல்லூரியின் 'உடற் கூற்றியல்' மண்டபத்தை கல்லூரியின் இயக்குநர்சபைத் தலைவர் டாக்டர் கெங்காதரன் நேற்று திறந்து வைத்தார்.

மூளாயில் 30 லட்சம் ரூபா செலவில் இந்த கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ் வைபவத்தில் கல்லூரி இயக்குநர்சபை செயலாளர், உறுப்பினர்கள், மாணவர்கள் பெற்றோர் ஆகியோர் பங்கு பற்றினர்.

# பண்டத்தரிப்பில் சடலம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பிரான்பற்று முல்லையடி வைரவர் கோவிலடியில் நேற்றுக்காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமொன்றுகாணப்பட்டது.

பிரான்பற்றைச் சேர்ந்த பொன்னையா பவளராசா (வயது 39) என்பவரே சடலமாகக்காணப்பட்டவராவார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின்பின் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

## போக்குவரத்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரஞ்சன் விஜயரத்ன, போக்குவரத்து அமைச்சர் திரு. விஜயபாலமெண்டிஸ், தகவல் துறை ராஜாங்க அமைச்சர் திரு. ரணசிங்க ஆகியோர் நேற்று அதிகாலை நான்கு மணியளவில் ஜனாதிபதியை அவரது இல்லத்தில் சந்தித்து மேற்கொண்ட முடிவுகளுக்கமையவே இந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதை அடுத்து போக்குவரத்து சேவை ஓரளவு சுமுகநிலைக்குத்திரும்பியது.

அரசின் இந்த முடிவுகளின்படி 1982-ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மாதாந்தம் 45 ரூபா சம்பள உயர்வு நிலுவையுடன் வழங்கப்படும். இவ்வருடம் அக்டோபர் மாதம் முதல் இச்சம்பள அதிகரிப்பு நிலுவை மூன்று தவணைகளில் வழங்கப்படவுள்ளது. ஜுலை மாத சம்பளத்திலும் இந்த 45 ரூபா அதிகரிப்பு சேர்த்துக்கொள்ளப்படும்.

இது தவிர சகலதர ஊழியர்களுக்கும் 180 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

வேலை நிறுத்தக் காலத்தின் போது வேலைக்கு வராத சகல ஊழியர்களுக்கும், அக்காலப் பகுதிக்கான சம்பளம் வழங்கப்படும். வேலைக்குவரத்தவறியோர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது. வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்டோர் பழிவாங்கப்படவும்மாட்டார்கள்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க, உள்ளூராட்சி கூட்டுத்தாபனங்களில் அதிகாரிகள் தரத்தில் அல்லாத சாதாரண தர ஊழியர்களின் சம்பளத்தையும் அதிகரிக்க நிதி அமைச்சரும் பிரதம மந்திரியுமான திரு. டி.பி. விஜயதுங்க முடிவு செய்துள்ளதாகவும் அமைச்சர் திரு. விஜயபாலமெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து ஊழியர்கள் அனைவரும் நேற்று முதல் வேலைக்குத் திரும்புவார்கள் என்ற உடன்பாட்டின் அடிப்படையிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ் எழுத்துமூலம் விடுத்த உடன்பாட்டையடுத்தே போக்குவரத்து ஊழியர் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாகவும் மேற்படி சபையின் ஊழியர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

# அரசியலமைப்புக்குட்பட்ட சுமுகமான தீர்வுக்கு முயற்சி!

## முதலமைச்சர் அறிவிப்பு

(திருகோணமலை)

இலங்கை அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் இனப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வுகாண முயலப்போவதாக வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

சுதந்திர ஈழத்தை அறிவிக்கும்படி தமக்கு நிர்ப்பந்தம் வந்த போதிலும் அதனைச் செய்ய தாம் விரும்பவில்லை என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இனப்பிரச்னைக்கு இறுதியானதும் நிரந்தரமானதுமான தீர்வுகாண்பதற்கு சந்தர்ப்பம் வந்து விட்டது என்றும் தெரிவித்த திரு. வரதராஜப்பெருமாள், ஜனாதிபதி பிரேமதாசா கௌரவப் பிரச்னையாக எடுக்காமல் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கடிதத்துக்கு இணக்கமான பதிலை அனுப்ப வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

## பாரிஸிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தலைவர்களுடனும், நடத்தும் பேச்சுவார்த்தை குறித்து உடனுக்குடன் பாரிஸிலிருக்கும் திரு. ராஜீவ் காந்திக்கு அறிவிக்கப்படுகிறது.

விசேட பிரதிநிதி கொண்டு வந்த கடிதம் இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டபின்னர் இலங்கையின் நிலைமை குறித்தும் விரிவாக திரு. காந்திக்கு அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அமிர், யோகேஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இரவு 7-30 மணியளவில் பம்பலப்பிட்டியிலுள்ள திரு. யோகேஸ்வரனின் இல்லத்தில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாகவும் இந்தக்கூட்டம் ஆரம்பமாவதற்கு 20 நிமிடங்கள் முன்னதாக அங்கு வந்திருந்த மூன்று இளைஞர்கள் இவர்களை சுட்டுக்கொன்றதாகவும் அறியப்படுகிறது.

இச்சம்பவத்தின் விபரங்களோ, மரணச் சடங்குகளின் விபரங்களோ இன்று அதிகாலை 2 மணிவரை கிடைக்கவில்லை.

## பருத்தித்துறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் நடமாட்டம் எதுவுமின்றி பருத்தித்துறை நகர் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

நேற்று பருத்தித்துறையின் பல இடங்களில் வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. நாலாம் குறுக்குத் தெருப்பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சுடப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. (51)

## ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மட்டத்திலும் பேச்சுக்கள் இடம்பெற்றன.

திரு. ராஜீவின் விசேட பிரதிநிதி இன்றும் திரு. பிரேமதாசாவுடன் பேச்சு நடத்துவார்.

இதேவேளை திரு. தேஷ்முக் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அமைச்சர்கள் திரு. காமினி திசநாயக்கா, திரு. அத்துலத்முதலி ஆகியோரையும் சந்தித்து பேச்சு நடத்தினர்.

## பத்மநாபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தை நடத்திவரும் இயக்கத்தினர் வன்முறைகளைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு திரும்புவார்களானால் இதனைச் செய்ய தயாராக இருப்பதாக திரு. பத்மநாபா நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

அந்த இயக்கத்தினர் தம்மிடமுள்ள துப்பாக்கிகளை மற்ற இயக்கத்தினர் மீது திருப்பாதிருக்க இலங்கை அரசு உத்தரவாதமளித்தால் மாகாணசபை பதவியிலிருந்து விலக தயாராக இருப்பதாகவும் திரு. பத்மநாபா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி இன்று அம்பாறை விஜயம்

(மட்டக்களப்பு)

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா மூன்று நாள்விஜயத்தை மேற்கொண்டு அம்பாறைக்கு விஜயம் செய்கிறார்.

அம்பாறையில் இயங்கவுள்ள நடமாடும் ஜனாதிபதி செயலகத்தில் தலந்து கொள்ள வரும் ஜனாதிபதியுடன் அமைச்சர்களும் ராஜாங்க அமைச்சர்களும் வருகின்றனர்.

## மருத்துவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் மருத்துவக் கல்லூரிக்கு துணைபோகாதே'' என்ற சுவரொட்டி உட்பட பல சுவரொட்டிகள் நேற்றுபல்கலைக் கழகத்தில் ஒட்டப்பட்டிருந்தன.

## பேராதனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று பலாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதுவரை தத்தமது வீடுகளுக்கு வந்துசேராத மாணவிகள் பற்றிய விபரங்களை அறிய விரும்பும் பெற்றோர் பலாலி விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## அமைதிப்படை விலகா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யேறவேண்டும் அல்லதுமுகாம்களுக்குள் முடக்கப்படவேண்டும், இல்லையேல் அது ஒரு ஆக்கிரமிப்புப் படையாக கருதப்பட்டு அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர்மகாநாட்டிலேயே அமைச்சர் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவுகளை அறிவிப்பதற்காக நடைபெற்ற இப்பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

''இலங்கையிலுள்ள ராணுவப்படைகளுக்கு ஜனாதிபதியே தலைமைத் தளபதி. அவர் கேட்டுக்கொண்டதற் கிணங்க அமைதிப்படை வெளியேற வேண்டும் அல்லது முகாம்களுக்குள் முடக்கப்படவேண்டும்.

''ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்புவதற்கு சகல தமிழ் குழுக்களினது ஆதரவு அரசுக்கு அவசியம் தேவை.

எந்த ஒரு தமிழ்க்குழுவையும் புறக்கணிக்கும் நோக்கம் அரசுக்குக்கிடையாது.

சகல தமிழ்க் குழுக்களும் இந்நாட்டுப் பிரஜைகள் என்ற ரீதியில் சரிசமாகவே நடத்தப்படுகின்றனர்,

பல்கலைக்கழகங்களில் தீவிரவாத இயக்கத்தினர் ஊடுருவியுள்ளமையினாலேயேஅவற்றை மூடுவதற்கு அரசு தீர்மானித்தது. தீவிரவாதிகள் பல்கலைக் கழகங்களில் பாதுகாப்பாக இருந்து கொண்டு வெடிகுண்டுகளையும் ஆயுதங்களையும் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு வன்முறைச்சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜுலை மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone 22389. 24126.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org